**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

அ.வ.எண்.198/2023 வா.சா.1முருகேசன்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 16.02.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் என்ன படித்து உள்ளேன் என்றால் 10 ஆம் வகுப்பு படித்து உள்ளேன். நான் எங்கு வசிக்கிறேன் என்றால் 3/7 தலைகண்டியம்மன் கோவில் வீதி , வேட்டைக்காரன்புதூரில் வசிக்கிறேன். மேற்படி முகவரில் வசிப்பதாக தான் வழக்குரை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். என் பெற்றோர் ராமசாமி மற்றும் மயிலாத்தாளுக்கு நான் , பிரதிவாதி கன்னியப்பன் மற்றும் நாச்சம்மாள் ஆகியோர் குழந்தைகள் என்றால் சரிதான். வழக்கு சொத்து எங்கள் தந்தைக்கு 22-04-1988 தேதியிட்ட வா.சா.ஆ. 1 பாக சாசனப்படி ஏ அட்டவணை சொத்தாக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

2) வழக்கு சொத்து வேட்டைக்காரன்புதூர் கிராமத்தில் உள்ள ஒரு நத்தம் வீடு என்றால் சரிதான். அந்த வீட்டின் பரப்பளவு எனக்கு தெரியுமா என்றால் 709 சதுரடி ஆகும். வழக்கு வீட்டில் தற்சமயம் பிரதிவாதி வசிக்கிறார் என்றால் சரிதான். ஆனால் என் பொருட்கள் இன்னும் அங்கு தான் உள்ளது. நான் என் வழக்குரையிலோ, சாட்சிய வாக்குமூலத்திலோ என்னென்ன பொருட்கள் அங்கு உள்ளன என்ற விவரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் அவ்வாறு எப்பொருளும் அங்கு வைக்காததால் தான் நான் என் வழக்குரையிலோ, சாட்சிய வாக்குமூலத்திலோ என்னென்ன பொருட்கள் அங்கு உள்ளன என்ற விவரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

3) வழக்கு வீட்டின் நான் அனுபவம் செய்து வருவதை காட்டும் ஆவணம் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு அருகில் என் தந்தை கடந்த 07-07-2003 தேதியில் பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் உள்ளன என்றால் சரிதான். அச்சொத்தில் தான் நான் தற்போது வசிக்கிறேன் என்றால் சரிதான். 07-07-2003 தேதியிட்ட உயில் சொத்துக்கள் என் தந்தைக்கு எப்படி பாத்தியப்பட்டன என்றால் அவர் கிரையம் பெற்ற சுய சம்பாத்திய சொத்துக்கள் ஆகும்.

4) என் தந்தை கடந்த 13-01-2017 தேதியிட்ட ஒரு பதிவு செய்யப்படாத உயில் படி வழக்கு சொத்தை பிரதிவாதிக்கு ஆதரவாக எழுதியுள்ளார் என்றால் சரியல்ல. பாகம் கோரி எந்த ஆண்டு நான் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் 2023 மார்ச்சில் அனுப்பினேன். அதன் பின்னர் பிரதிவாதி 13-01-2017 தேதியிட்ட உயில் விவரத்தை கூறி என்னிடம் அதன் நகல் ஒன்றை நேரடியாக கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த உயிலுக்கு நான் மறுப்பு ஏதும் தெரிவிக்கவில்லை என்றால் அந்த உயில் பற்றி அவர் கூறாததால் மறுப்பு தெரிவிக்கவில்லை. பிரதிவாதி என்னிடம் மேற்படி உயில் பற்றி கூற நான் தெரிந்து கொண்டேன் என்றும் ஆனால் தற்போது வழக்கிற்காக அந்த உயில் பற்றி அவர் கூறாததால் மறுப்பு தெரிவிக்கவில்லை என பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

5) என் தந்தை தனக்கு பாத்தியப்பட்ட இரண்டு சொத்துக்களில் ஒன்றை 07-07-2003 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட உயில் படி தன் ஆயுள் வரை தானே அனுபவித்து அதன் பின்னர் நாச்சம்மாள் அவர் ஆயுள் வரை எவ்வித வில்லங்கத்திற்கும் உட்படுத்தாமல் அனுபவித்து கொள்ளவும் அதன் பின்னர் அச்சொத்து எனக்கு பாத்தியப்பட வேண்டும் எனவும் கண்டு எழுதினார் என்றும் தனது மற்றோரு சொத்தான வழக்கு சொத்து பொறுத்து 13-01-2017 அன்று பிரதிவாதிக்கு ஆதரவாக ஒரு பதிவு செய்யப்படாத உயில் ஒன்றை ஏற்படுத்தினார் என்றும்

மேற்படி விவரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்று சொன்னால் 07-07-2003 தேதியிட்ட உயில் விவரங்கள் மட்டுமே சரியானவை . 13-01-2017 தேதியிட்டதாக சொல்லும் உயில் போலியானது.

6) என் தந்தை நல்ல உடல்நிலையிலும் ,நல்ல மனநிலையிலும் குடும்பத்தின் மூத்தவர் என்ற நிலையில் தனது சொத்துக்கள் இரண்டில் ஒன்றை எனக்கும் மற்றொன்றான வழக்கு சொத்தை பிரதிவாதிக்கும் என இரு தனித்தனி உயில் ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. மேற்படி இரு உயில்களும் தரப்பினர் இருவரையும் கட்டுப்படுத்தும் என்றும் ஆனால் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**ஒப்பம்/-(மு.ச.ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி